
ராணி காமிக்ஸ்
முகமூடி வீரர்
மாயாவி
தோன்றும்
கடத்தப்பட்ட
இளவரசி

இது என்ன?

இது என்னவென்று தெரிகிறதா? தெரியாவிட்டால், 1-ல் இருந்து 46 வரையுள்ள புள்ளிகளை இணைத்துப் பாருங்கள். விடை கிடைக்கும்!



வைக்கம் வீரர்!

கேரளாவில் கொச்சிக்கு அருகே வைக்கம் என்ற ஊர் இருக்கிறது. அந்த ஊரில் உள்ள கோவில்களிலும் அதைச் சுற்றியுள்ள 4 வீதிகளிலும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர் நடந்து செல்லக்கூடாது என்ற நிலை இருந்து வந்தது. அப்போது தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவராக இருந்த ஈ.வெ.ரா. பெரியார் இதைக் கேட்டு கொதித்து எழுந்தார். நேராக வைக்கத்துக்குச் சென்றார். அங்குள்ள தாழ்த்தப்பட்டவர்களை அழைத்துக்கொண்டு கோவிலைச் சுற்றியுள்ள அந்த 4 வீதி வழியாகச் சென்று போராட்டம் நடத்தினார். இரண்டு முறை பெரியார் கைது செய்யப்பட்டார். அதனால் பெரியார் "வைக்கம் வீரர்" என்று அழைக்கப்பட்டார்.

இதன் காரணமாக வைக்கம் நகரில் பெரியாருக்கு நினைவகம் அமைக்க தமிழ்நாடு அரசு முடிவு செய்தது. அதனால் பெரியார் போராட்டம் நடத்திய இடத்தில் பெரியார் நினைவகம் அமைக்கப்பட்டுள்ளது.

நினைவகத்தில் பெரியார் சிலையும், வாழ்க்கை வரலாற்றை சித்தரிக்கும் படங்களும், அவர் எழுதிய புத்தகங்களும், பெரியார் பயன்படுத்திய பொருட்களையும் அருங்காட்சியகமாக வைக்கப்பட்டுள்ளது. இதுதவிர பெரியார் பெயரில் ஒரு திறந்த வெளி கலையரங்கமும் பூங்காவும் அமைக்கப்பட்டுள்ளது.

வருகிற 17-ந்தேதி பெரியாரின் 114-வது பிறந்த நாள் கொண்டாடப்படுகிறது. அன்று முதல்வர் ஜெயலலிதா வைக்கம் சென்று பெரியார் நினைவகத்தை திறந்து வைக்கிறார்.

நடுநிலை நாடுகளின் மாநாடு!

108 நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்ளும் நடுநிலை நாடுகளின் மாநாடு இந்தோனேசியா தலைநகர் ஜாகர்தாவில் நடந்தது. 95 நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொண்டார்கள். மீதியுள்ள நாட்டு தலைவர்கள் தன் சார்பாக மந்திரிகளை அனுப்பி வைத்தார்கள்.

இந்தியாவின் சார்பாக இந்திய பிரதமர் நரசிம்மராவ் மாநாட்டில் கலந்து கொண்டார்.

செய் அல்லது செத்துமடி

—நல்லைக்கவி அ. இளங்கோவன்

செய் அல்லது செத்துமடி — நம்
தேசம் வாழ வேண்டுமென்றால்
செய் அல்லது செத்துமடி — என்று
செப்பினார் காந்தி அண்ணலார்!

அடிமைப் பிணியாம் நோயதனை — நாம்
அகற்றி வைத்தோம் அவருரையால்
மிடிமைப் பிணியாம் வறுமையதும்—ஓட
விரட்டும் எண்ணம் நமக்குண்டா?

அடிமை ஒழித்த பொன்விழா — நாம்
ஆடம் பரமாய் நடத்துகிறோம்
குடிமை அழிக்கும் வறுமையதை—இன்னும்
குலவ விட்டுப் பார்க்கின்றோம்!

வறுமை ஒழிந்த நாட்டினிலே — நாம்
வாழ வேண்டும் என்றெண்ணிச்
சிறுமைச் சோம்பல் ஒழித்திடுவோம்—ஒன்று
சேர்ந்து கூடி உழைத்திடுவோம்!

★ நாகர்கோவில் வானொலி நிலையத்துக்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு. ஒரு மாவட்டத்துக்கு மட்டும் என்று இந்தியாவில் அமைக்கப்பட்ட முதல் வானொலி நிலையம், இதுதான்.

★ தமிழ்நாட்டில் உள்ள பழைய நகரசபைகளில் திருநெல்வேலி நகரசபையும் ஒன்று. 1866-ம் ஆண்டு 1-ந்தேதி நெல்லை நகரசபை அமைக்கப் பட்டது.

முதல் ரெயில்!

இந்தியாவில் முதல் ரெயில் 1853 ஏப்ரல் 16-ம் தேதி போர்பந்தருக்கும் தானேவிற்கும் இடையே விடப்பட்டது.

இதைக் குறிக்கும் முறையில் ஆண்டுதோறும் ஏப்ரல் 10 முதல் 16 வரை "இந்திய ரெயில்வே வாரம்" கொண்டாடப் படுகிறது.

ராணி காமிக்ஸ்-198
(மாதம் இருமுறை இதழ்)
TV
செப்டமபர் 16-30
1992

முகமூடி வீரர்
மாயாவி
தோன்றும்

கடத்தப்பட்ட இளவரசி


அடர்ந்த காட்டுக்குள் காட்டுவாசிகள் குடும்பம் குடும்பமாக வாழ்ந்து வநதார்கள். ஒரு கிராமத்தில இருபபவர்கள் இன்னொரு கிராமத்தில் பெண் எடுப்பது வழக்கமாக இருந்தது.
வாம்பசி கிராமத்துக்காரரர்கள் இலங்கை கிராமத்தில் பெண் எடுப்பது வழக்கம்.

ஒரு திருமணத் தம்பதிகள் சடங்கு களை நிறைவேற்றப் புறப் பட்டார்கள்.


அவர்கள் தங்கக் கடற்கரையை நோக்கிப் படகை செலுத்தினார்கள்.


அதேநேரம்— மாயாவி மாளிகையில்...
ரெக்ஸ்! நான் தங்கக் கடற்கரைக்குச் சென்றுவிட்டு நாலு நாளில் வநதுவிடுகிறேன்!
தங்கக் கடற்கரையா! மாமா! நாங்களும் வருகிறோம், மாமா!
ஆமாம் மாமா!


திரும்பி வர அதிக நாள் ஆகுமா?
இல்லை ரெக்ஸ்! உங்களை விட்டு விட்டு நான் இருப்பேனா? விரைவில் வந்து விடுவேன்!
மாயாவி புறப்பட்டார்.


நடுக்காட்டில் ஐந்தாறு மலைகளுக்கு நடுவில் தங்கக் கடற்கரை இருந்தது.
ஆகா! உல்கில்தான் எத்தனை எத்தனை அழகான இடங்கள்! அதில் இந்த தங்கக் கடற்கரையும் ஒன்று!


தங்கக் கடற்கரையில் பழங்காலத்து வீடு ஒன்று இருந்தது. அது விலையுயர்ந்த கற்களால் கட்டப்பட்டிருந்தது.
அதோ அவர்கள் வந்துவிட்டார்கள்!


திருமண தம்பதிகள் குறிப்பிட்ட ஒரு நாளில் தங்கக் கடற்கரைக்கு வந்து சடங்குகளை நிறைவேற்றிச் செல்வதுண்டு.


மத குருக்களின் முன்னிலையில் மண்டியிட்டு அமர்ந்து வாக்குறுதி எடுத்துக்கொள்வார்கள்.


தங்கக் கடற்கரையில் அதிசயம் என்ன வென்றால் மணல்கூட 'தகதக'வென்று மின்னும்!

நாங்கள் இன்பத்திலும் துன்பத்திலும் இணை பிரியாமல் வாழ்வோம்!
நாங்கள் இன்பத்திலும் துன்பத்திலும் இணைபிரியாமல் வாழ்வோம்!


எங்கள் சுக துக்கங்களில் இருவருமே பங்கெடுத்துக் கொள்வோம்!
நாங்கள் கடைசிவரை மன வேறுபாடு இல்லாமல் ஒற்றுமையாக இருப்போம்!
எங்கள் சுக துக்கங்களில் இருவருமே பங்கெடுத்துக் கொள்வோம்!
நாங்கள் கடைசிவரை மன வேறுபாடு இல்லாமல் ஒற்றுமையாசு இருப்போம்!
தம்பதிகள் வாக்குறுதி எடுத்துக்கொண்டார்கள்.


வாக்குறுதி முடிநததும் தம்பதிகள் கடலில் இறங்கி ஆசைதீர குளித்தார்கள்.


ஈர உடம்போடு தங்க மணலில் புரண்டார்கள். ஒருவருக்கொருவர் மணலை அள்ளி பூசிக் கொண்டார்கள்.
அதன்பிறகு அந்த பழங்காலத்து வீட்டுக்கு வந்தார்கள். தம்பதிகள் தங்கக் கடற்கரைக்கு வந்து கடலில் குளித்து, மணலை அள்ளி உடம்பில் பூசிக்கொண்டு இந்த வீட்டுக்கு வந்தால் வாழ்வில் இன்பம் பொங்கும் என்று நம்பினார்கள்.
பிறகு தம்பதிகள் அவரவர் கிராமங்களுக்குச் செல்வார்கள்.


கிராம மக்கள் புதுமணத் தம்பதிகளை வரவேற்று விருந்து கொடுப்பார்கள்.
என் தாத்தா- பாட்டி கூட தேனிலவுக்கு இங்கே வந்து போயிருக்கிறார்கள். ஒருநாள் நானும் டயானாவும் தேனிலவுக்கு இங்கே வருவோம்!
அனைவரும் தங்கக் கடற்கரையைவிட்டுப் புறப்பட்டனர்.
விசித்திரமான தீவுதான் இது! மணல் தங்கம் போல மின்னுகிறதே!



மாயாவி பலவித சிந்தனைகளோடு குகைக்குத் திரும்பினார்.




மாயாவி மண்டை ஓட்டுக் குகைக்கு வந்தார். நூற்றாண்டுக்கு முன் எழுதப்பட்ட ஒரு நான்கு நூலை எடுத்துப் படித்தார்.
தங்கக் கடற்கரை பற்றிய குறிப்பு இதில் இருக்கிறது!


17-ம் நூற்றாண்டில் இருந்த என் தாத்தா கடல் கொள்ளையர்களுடன் பயங்கரமாகப் போராடியிருக்கிறார்.


முடிவில் அந்தக் கொள்ளையர்களை வைத்தே காட்டிலாகாவை உருவாக்கியிருக்கிறார்.
நாங்கள் என்ன செய்ய வேண்டும்?
நீங்கள் காட்டிலாகாவினர்! காட்டை பாதுகாக்க வேண்டும்!

பிறகு என் தாத்தா நடலா என்ற இளவரசியை மணந்துகொண்டார்!

ஜோன் மன்னர்தான் தங்கக் கடற்கரையை எனக்கு பரிசாக கொடுத்தார்.
எதற்காக கொடுத் திருப்பார்?
மாயாவி தங்கக் கடற்கரை பற்றிய குறிப்பை படித்தார்.

மாமா! ஆள் அரவமே இல்லாத இந்தக் கடற்கரையில் ஏன் இந்த வீட்டை கட்டி வைத்திருக்கிறார்கள்?
புதிதாக திருமணம் செய்து கொள்ளுகிறவர்கள் வருடத்தில் ஒருநாள் இங்கே வந்து போனால் அவர்களுடைய வாழ்க்கை இனிமையாக இருக்கும் என்று நம்புகிறார்கள்!
இந்த வீட்டில் அப்படி என்ன மகிமை இருக்கிறது?
அய்யா! நல்ல மாமா!
எனக்கும் அதைப்பற்றி பெரிய ஆசைதான். வாருங்கள் படித்துச் சொல்லுகிறேன்!


மாயாவி நூலகத்தில் உள்ள நூலை எடுத்து படிக்கத் தொடங்கினார். ரெக்ஸ் மிகவும் ஆர்வத்துடன் கேட்டான்.
தங்கக் கடற்கரை மிகவும் இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. மன்னர் ஜோன்தான் அதற்கு சொந்தக்காரரர்!
ஜோனா? யார் அவர்?
உஷ்... சத்தம் போடாதே!


உலகின் தலைசிறந்த மன்னர்களில் ஜோனும் ஒருவர். மிகவும் தைரியசாலி. எதற்கும் அஞ்சாதவர்!


மிருகங்களை வேட்டையாடுவது
அவருக்கு நிரம்பப் பிடிக்கும்.


புலியை கண்டுவிட்டால் கையில் ஈட்டியுடன் அதன்
பின்னே சென்றுவிடுவார்.

ஒருமுறை ஜோன் புலியை நேருக்கு நேர் சந்தித்தார். ஈட்டியை றி பார்த்து புலியை நோக்கி வீசினார். ஈட்டி குறி தவறி விழுந்தது.
சே! குறி தவறி விட்டதே!
அபபொழுது— மாயாவி மறைந்திருந்து வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்.


என் தாத்தா அவரை பின்தொடர்ந்தே சென்றிருக்கிறார்!
தாத்தா என்றால் யார்?
உன் பெற்றோருடைய பெற்றோர்!

ரெக்ஸ் பெற்றோரை நினைத்ததும் அழுதுவிட்டான்! அவனுக்கு அம்மா-அப்பா இருவரும் இல்லை. எல்லாம மாயாவிதான்.
மரக்ஸ்! உன் பெற்றோரை நினைவுபடுத்திவிட்டேன. மன்னித்துவிடு!
பரவாயில்லை! நீங்கள் மேலே படியுங்கள் மாமா!
நான் அங்கு மறைந்திருப்பது. புலிக்கோ ஜோனுக்கோ தெரியாது. என்ன நடக்கிறது என்று மறைந்திருந்தேன்!
அய்யா!

அடுத்த விநாடி– புலி மன்னன் ஜோன் மீது ஆவேசமாக பாய்ந்தது.
கொர்...!
ஆ....!


அதற்குள் நான் ஜோனைக் காப்பாற்ற கையில் கத்தியுடன் புலியின் மீது பாய்ந்தேன்.
புலியின் கழுத்தைப் பிடித்து இறுக்கினேன்.

அதற்குள் புலி திமிறியது. என்னை கீழே தள்ளி விட முயன்றது.

அதற்குள் நான் புலியை கத்தியால் குத்திக் கொன்று தூக்கி வீசிவிட்டேன்.
பளார்...!

அய்யா! மாயாவி தாத்தா மன்னரைக் காப்பாற்றி விட்டார்!
சொல்கிறேன் கேளுங்கள்!
மன்னர் உங்கள் தாத்தாவை பாராட்டி இருப்பாரே!


ஏய்... யார் நீ? புலியை நான் கொலல நினைத்தேன். அதற்குள் நீ புகுந்து காரியத்தை கெடுத்துவிட்டாயே...!
?!

என்ன மாமா? உங்கள் தாத்தா மன்னரின் உயிரை காப்பாற்றியிருக்கிறார்! அவருக்கு நன்றி சொல்லாமல் ஏன் இப்படி பேசுகிறார்!

ஜோன் பெருமை பிடித்தவன். எதையும் தானே செய்து வெற்றிபெற வேண்டும் என்ற வைராக்கியம் கொண்டவன்!
பொன்னும் பொருளும் தருவேன் என்று நினைத்து என்னைக் காப்பாற்றினாயா?
நீங்கள் அப்படி நினைத்துக்கொண்டால் அதற்கு நானா பொறுப்பு!


என்னை என்ன கோழை என்று நினைத்துவிட்டாயா? நீயா? நானா? பார்த்துவிடுவோம்!
?
ஜோன் கையில் இருந்த ஈட்டியை இரண்டாக முறித்தான்.

ஈட்டியிருக்கும் பகுதியைதரையில் குத்தி நிறுத்தி வைத்தான்.
வா! யாருக்கு பலம் அதிகம் என்று பார்த்துவிடுவோம்!
நான் யாருடனும் போட்டி போட விரும்பவில்லை!
போட்டி வேண்டும்! அப்பொழுதுதான் யார் பலசாலி என்று தெரியும்!


பலப்பரீட்சை தொடங்கியது
இந்தா என் கையை பிடி! இரண்டில் ஒனறு பார்த்துவிடுவோம்!
சொன்னால் கேட்க மாட்டாய்...!

நான் என் பலத்தை நிரூபிக்க யாருடனும் போட்டியிட்டதில்லை. சண்டை போட்டதுமில்லை.
ஏய்... அங்கே பார்!
யாரும் கிட்டே வராதீர்கள!
ஜோனின் வீரர்கள் திகைத்துப்போய் நின்றார்கள்.


வீரர்கள் அனைவரும் முற்றுகையிட்டார்களே.
அரசே! என்ன இது? அவனை என்னிடம் விடுங்கள்!
இல்லை! இது என்னுடைய வீரத்துக்கு பலப்பரீட்சை'


ஆமாம் அவர்கள் எல்லாம் யார்?
அரசரை தேடி வந்தவர்கள்!
போட்டி உச்சக்கட்டததை அடைந்து கொண்டிருந்தது. இருவரும் ஒருவருக் கொருவர் சளைததவர் அல்ல என்பது போல் இருந்தது. அப்போது–


மன்னன் என்னை ஈட்டி அருகே இழுத்துப் போய்விட்டான். ஈட்டி என் மார்பை பதம் பார்த்திருக்கும்.
ஒரே ஒரு விநாடிதான் அதற்குள் நான் சுதாரித்துக் கொண்டு மன்னன் ஜோனை தூக்கி சுழற்றி வீசிவிட்டேன்!
ஜோன் தூரத்தில் போய் 'பொத்' என்று விழுந்தான்.
போட்டியின் விதிமுறையை மீறிவிட்டாய்!
இல்லை! நான் ஏன் விதி முறையை மீறப் போகிறேன்'
ஜோன் தடுமாறி எழ முயன்றார். நான் உதவப் போனேன்.
தேவையில்லை! யாருடைய உதவியும் எனக்கு தேவை இல்லை!

பார் நீ? ஏன் முகமூடி அணிந்திருக்கிறாய்?
நீ யார் என்று முதலில் சொல்!


நான் ஜோன் மன்னன்!
நான் மாயாவி!
!
!

நீதான் சாகா வரம் பெற்ற மாயாவியா?
உன்னை சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி!
நீதான் உலகையே ஆட்டி படைத்து கொண்டிருக்கும் ஜோன் மன்னனா? பரவாயில்லை. மன்னருக்கு இவ்வளவு துணிச்சல் தேவைதான்!
இல்லாவிட்டால் உலகின் பாதியை ஆளமுடியுமா?
அதிகம் புகழாதே மாயாவி!
இனி, நாம் இருவரும் நண்பர்கள். நீ என் நாட்டுக்கு கண்டிப்பாக வரவேண்டும்.
உனக்கு என்ன வேண்டும் கேள்! வாரி வழங்குகிறேன்!
இருவரும் நண்பர்கள் ஆனோம்.
ஜோனின் நாட்டுக்கு செல்ல புறப்பட்டேன்.


உங்கள் தாத்தா ஜோனிடம் கோடி ரூபாய் கேட்டிருப்பாரா?
மாயாவி பணத்துக்கெல்லாம் ஆசைப்பட மாட்டார்! சொல்கிறேன்!
மாயாவி– தங்கக் கடற்கரையைப் பற்றி படித்துக்கொண்டிருந்தார்.


ஜோன் அவனுடைய அரண்மனைக்கு அழைத்துச்சென்றான்
கோடையில் நான் இந்த அரண்மனையில்தான் ஓய்வு எடுப்பேன்!
அப்படியா?

உள்ளே- உலகில் இருக்கும் அழகிகள் எல்லாம் அங்கேதான் இருப்பார்கள் போலிருக்கிறது.
உலகின் ஓவியக் கருவூலமே அங்கேதான் இருக்கிறது.
நான் அழகை ரசிப்பவன்! கலை என் உயிர். அதனால் தான் உலகிற்சிறந்த கலைப் பொருட்களை சேகரித்து வைத்திருக்கிறேன்!
அப்போது- ஒரு காட்டுவாசியை கட்டி இழுத்து வந்தார்கள்.
மாயாவி! நான் வேட்டைக்குச் சென்றால் இவன் ஈட்டிகளை சுமந்து வருவான். காட்டில் புலியைக் கண்டதும் ஓடி விட்டான். அதனால் அவனுக்கு மரண தண்டனை!
ஜோன்! நான் கேட்பதை தருவதாக சொன்னாயே!
இப்போது கேட்கிறேன். இவனை விட்டுவிடு!
அவன் சாகக்கூடாது! அவ்வளவுதானே!

நான் வாக்கு கொடுத்தால் மீறமாட்டேன்! உனக்காக அவனை விட்டுவிடுகிறேன்!
ஜோன்! அவன் கெட்டவன் இல்லை. ஏதோ பயத்தில் ஓடிப்போய் இருப்பான். அவனை விடுவித்தமைக்கு நன்றி!
ஆமாம் ரெக்ஸ்! நாங்கள் எந்த உயிருக்கும் தீங்கு விளைவித்ததில்லை!
நல்ல மாமா!
என் உயிரை காப்பாற்றி விட்டீர்கள் ரொம்ப நன்றி!
இவனை கூட்டிச் சென்று காட்டிலாகாவில் ஏதாவது வேலை கொடு!
ஓ.கே. சார்!

ஜோன் அரண்மனையில் மாயாவிக்கு இராஜ உபசாரம் நடந்தது. மாயாவிக்கு தன் வீரர்களின் அணிவகுப்பு மரியாதையை கொடுத்தான்.


அதன்பிறகு நடனங்கள் எல்லாம் நடந்தன.

தன் கருவூலங்களை எல்லாம் காட்டினான்.
இதுதான் என் ஒரே மகள்! பெயர் ஷீலா! என் உயிரே இவள்தான்!
மிகவும் அழகாக இருக்கிறாள்!
ஜோனும் மாயாவியும் புறப்பட்டார்கள்.
என் மகளுக்கு நான் என்ன பரிசு கொடுக்கப் போகிறேன். பார்...!
அசந்துவிடுவாய்!
இரண்டு மணி நேர பயணத்திற்குப் பிறகு ஒரு கடற்கரையை அடைந்தோம்.
நிலவொளியில் அந்தக் கடற்கரை தங்கம் போல 'தகதக'வென ஜொலித்தது.
இதோ இதுதான் அந்தப் பரிசு!

என் முன்னோர்கள் இந்த தங்கக் கடற்கரையை உருவாக்கியிருக்கிறார்கள்.
ஆனால் யாரும் இங்கு வருவதில்லை. பயம். ஆனால் நான் துணிந்து வந்தேன். என் திருமணம் இங்குதான் நடந்தது! இப்பொழுது இந்தக் கடற்கரையில் என் மகளுக்காக சிறிய வீட்டை கட்டியிருக்கிறேன் மாயாவி! உன் திருமணத்தைக் கூட இங்கேயே நடத்திக் கொள்ளலாம!
ஜோனும், மாயாவியும் தங்கக் கடற்கரையை பார்த்துவிட்டு அரண்மனைக்கு திரும்பினார்கள்.
மாயாவி! நீ எனக்கு நண்பனாக கிடைத்தற்கு நான் பாக்கியம் செய்திருக்க வேண்டும்!
ஜோன் உண்மையிலேயே நான் பெருமைப்படுகிறேன!
அரசே!
அப்பொழுது காவலாளி ஜோனை அழைததான்.


அரசே! இளவரசி ஷீலாவை கடற் கொள்ளையர்கள் கடத்திவிட்டார்களாம். ஒற்றன் வந்திருக்கிறான்!
இவன்தானா அந்த ஒற்றன்?
ஆமாம் அரசே!


டேய்...! என்ன தைரியம் உன்னை...
எனக்கு ஆபத்து என்றால், அங்கே உன் மகள் காலி!
ஜோன், அவசரப்படாதே!
ஜோன் துடிதுடித்துப் போனான்.

அங்கே கப்பலில் உன் மகள் அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருக்கிறாள். இரு பக்கமும் உள்ள பீரங்கிகள். வெடித்தால் உன் மகள் தூள் தூளாகி விடுவாள்!
எங்களுக்கு இந்த அறை முழுக்க தங்கம் வேண்டும்!
என் நாட்டையே தருகிறேன்!
ஜோன் சற்றுப் பொறு!
ஏய், அவன் உன்னை மிரட்டிப் பார்க்கிறான்!
வேறு என்ன வழி இருக்கிறது!
முக்கியமான இடத்தில் நிறுத்திளிடீர்கள்!
நேரம் ஆச்சு! மீதியை காலையில் சொல்லுகிறேன்!


மறுநாள் காலை— மாயாவி காலை உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தார்.
மாமா! வாருங்கள் மாமா. கதையை சொல்லுங்கள் மாமா!
ஜோன் மன்னரை இக்கட்டான சூழ்நிலையில் நிறுத்தி விட்டீர்களே!
இருங்கள்! சாப்பிட்டுவிட்டு வந்துவிடுகிறேன்:


மாயாவி மீண்டும் நூலகததிற்கு வந்து, கதையை விட்ட இடத்தில் இருந்து படிக்கத் தொடங்கினார்.
ஜோன்! கொள்ளையர்கள் கேட்டதை கொடுக்க தயாரானார். ஆனால என் காத்தா ஜோனை தடுத்துவிட்டார்!


ஜோன்! இது பைத்தியக் காரத்தனம்!
இல்லை. என் மகளுக்காக எல்லா வற்றையும் இழக்கத் தயாராக இருக்கிறேன்!
காலதாமதம் வேண்டாம்!


என் ஷீலாவுக்காக இந்த அறை முழுக்க தங்கக் கட்டிகளை நிரப்புங்கள்!
நில்லுங்கள்! முதலில் இளவரசி கடத்தப்பட்டது உண்மையா என்று தெரிய வேண்டும்!
ஏன் நம்பிக்கை இல்லையா? என்னுடன் வாருங்கள் காட்டுகிறேன்!

கொள்ளையன் அவர்களை கடற்கரைக்கு அழைத்து வந்தான்.
அதோ அந்த நடுக் கப்பலில் பாருங்கள்!
தூரத்தில் மூன்று கப்பல் நின்றுகொண்டிருந்தது.
மன்னர் தொலைநோக்கி மூலம் பார்த்தார்.
ஆமாம் என் மகள்தான்! அடப் பாவிகள்!
மாயாவி! இப்பொழுது என்ன செய்வது?
ஜோன்! நான் இருக்கும்போது ஏன் கவலைப்படுகிறாய்! உன் மகளை காப்பாறறுவது என் பொறுப்பு!

எங்கள்டமே மோதிப் பார்க்கிறாயா?
நீ அம்புதாண்டா! எய்தவனை நான் பார்க்கிறேன்!
கும்...!
மாயாவி தூதனாக வந்த கொள்ளையனுக்கு ஓங்கி ஒரு குத்துவிட்டார்.
நான் கப்பலுக்கு திரும்பிச் செல்லாவிட்டால் இளவரசி காலி!
இளவரசி எப்படியும் இங்கே வந்துவிடுவாள். நீதான் சாகப் போகிறாய்!
அவனைப் பிடித்து கட்டி வைத்தார்.


அன்று
இரவே மாயாவி தன் திட்டத்தை செயல்படத் தொடங்கினார்.
என் திட்டப்படி செயல்பட்டால் இளவரசியை எளிதில் மீட்டுவிடலாம்!
மாயாவி ஒரு மிதவையில் பானையை வைத்து அதில் நெருப்பு மூட்டி கடலில் இறக்கினாா.


நான்கைந்து பேர் அந்த மிதவையை தள்ளிக்கொண்டே கடலுக்குள் சென்றார்கள்.

அதேநேரம்— இளவரசியை சிறை வைக்கப்பட்டிருந்த கப்பலில் கொள்ளையர்கள் சுறுசுறுப்புடன் இயங்கிக் கொண்டிருந்தார்கள்.
எய்... அங்கே பார்?
என்ன இது?
அவர்கள் அப்போதுதான் மிதவையை கவனித்தார்கள்.
அந்த அடர்த்தியான இருட்டில் மிதவையில் இருந்த நெருப்பு பளிச்சென்று தெரிந்தது.
தீ போலத் தெரிகிறது!
தண்ணீரில் மிதந்து வருகிறதே!
இதில் எதோ சூழ்ச்சி இருக்கிறது!
அவர்கள் தண்ணீரில் மூழ்கிய படியே மிதவையை கப்பலை நோக்கி இழுத்து வந்தார்கள்.

கப்பலில் இருந்தவர்கள் அனைவரது கவனமும் இப்போது அந்த மிதவையில்தான் இருந்தது.
டுமீல்...! டுமீல்...!
ம்.. சுட்டுத் தள்ளுங்கள்!
உஷ்...! சத்தம் போடாதீர்கள்!
இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மாயாவி கப்பலின் பின்பக்கம் வழியாக மேலே ஏறினார் அவருடன் சில வீரர்களும் வந்திருந்தனர்.
ஏய்...! கப்பலில் துப்பாக்கிச் சத்தம் கேட்கிறது. என் ஷீலாவுக்கு ஏதாவது ஆச்சு... உன்னை துண்டு துண்டாக வெட்டி கட லுக்குள் வீசிவிடுவேன்!
ஆ...!
கடற்கரையில் இருந்த கொள்ளையன் ஜோனின் பார்வையில் இருந்தான்.


அதே நேரம்—
மாமா இளவரசியை காப்பாற்றி விட்டாரா...?
அவசரப் படாதே.
ரெக்ஸ் ஆவலுடன கதை கேட்டுக கொண்டிருந்தான்.
கப்பலில் மிகவும் பரபரப்பாக காணப்பட்டது.
அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்டு மாயாவியும் மற்றவர்களும் கப்பலுக்குள் வந்தார்கள்.
சுட்டுத் தள்ளுங்கள்!

அதற்குள்– இரண்டு கோஷ்டியினருக்கும் கடுமையான சண்டை நடந்தது.
ஏய்...! அவர்களை பார்த்துக்கொள்ளுங்கள். நான் இளவரசியை காப்பாற்றுகிறேன்!

நீங்கள் போங்கள்! இவர்களை நான் கவனித்துக் கொள்கிறேன்!
கப்பல் இரத்தக் களறியாக மாறிக்கொண்டிருந்தது.

கூண்டில் அடைபட்டிருந்த இளவரசியை மீட்பதற்காக மாயாவி விரைந்து கொண்டிருந்தார்.
கீழே இருந்த இரண்டு பேர் மாயாவியை நோக்கி சுட்டார்கள்.
மாயாவி பீரங்கிகளின் குறியில் இருந்த கூண்டை உடைத்து இளவரசியை வெளியே அழைத்தார்.
வேண்டாம்!
உன் அப்பாதான் என்னை அனுப்பி வைத்தார்!
அடுத்த விநாடி—
கொள்ளையர்கள் பீரங்கியை இயக்கவும், மாயாவி இளவரசியை தூக்கிக்கொண்டு கடலுக்குள் விழவும் சரியாக இருந்தது.
!!
கூண்டு தூள் தூளாக சிதறிப் போனது.

அதே நேரம்— கடற்கரையில்
அய்யோ! கூண்டு வெடித்து சிதறி விட்டதே!
கடவுளே!
நடு இரவில் கூண்டு வெடித்தது பிரகாசமாக தெரிந்தது.
அய்யோ! என் மகள் இறந்து விட்டாளே!
ஜான் கதறி அழுதார்.
ஜோன் மகள் இறந்துவிட்டாள் என்று நினைத்துக்கொண்டான். ஆனால் என் காத்தா அவளைக் காப்பாற்றி கடலில் குதித்துவிட்டார்.

சிறிது நேரத்தில் தண்ணீருக்கு மேல் வந்த இளவரசி படபடத்தாள்.
அய்யோ எனக்கு நீச்சல் தெரியாதே!
பரவாயில்லை. என்மேல் ஏறிக்கொள். நான் உன்னை கரை சேர்க்கிறேன்!

கொள்ளையர்களை மாயாவியின் ஆட்கள் புரட்டி எடுத்துக் கொண்டிருந்தார்கள்.
தலைவரிடம் இருநது அடுத்த கட்டளை வர வில்லையே என்ன செய்வது?
இன்னும் சிறிது நேரம் போராடிப் பார்ப்போம்!

அதற்குள் ஒருவன் பாட்டிலில் நெருப்புடன் கடலில் வந்துகொண் டிருந்தான்.
கப்பலின் இடது ஓரத்தில்தான் வெடிமருந்து அறை இருக்கிறது!
அடுத்த விநாடி– கப்பலில் இருந்த மாயாவியின் ஆட்கள் அனைவரும் கடலுக்குள் குதித்ததும் நெருப்பு பாட்டிலை வெடிமருந்து அறைககுள் தூக்கி வீசப்பட்டது!
அனைவரும் தப்பிவிட்டனர்!
அடுத்த விநாடி– அந்தக் கப்பல் சுக்கல் சுக்கலாக வெடித்துச் சிதறியது. கரையில் இருந்த ஜோன் மிகவும் சோகமாக இருந்தார்.
அப்போது மாயாவி ஷீலாவை தூக்கிக்கொண்டு கரை ஏறினார்.
ஜோன்! பயப்பட வேண்டாம். லேசான மயக்கம் தான்!
என் மகள் பிழைத்து கொண்டாளா?
ஜோன் குதூகலத் துடன் ஓடிவந்தார்


இளவரசி உயிரோடு கிடைத்துவிட்ட மகிழ்ச்சியில் இருந்தார் ஜோன் மன்னர்
என் நண்பர்கள்தான் உன்னை காப்பாற்றினார்கள்.
அப்பா! நான் பிழைப்பேன் என்று எதிர்பார்க்கவே இல்லை!
அதே நேரம்– கொள்ளையர்களின் கப்பல் கொஞ்சம் கொஞ்சமாக கடலுக்குள் மூழ்கிக்கொண்டிருந்து.

காப்பாற்றியதற்கு இந்த தங்கத்தை எடுத்துக் கொள்ளுங்கள்!
அரசே! நாங்கள் வெகுமதியை எதிர்பார்த்து யாருக்கும் உதவுவதில்லை!

விரைவிலேயே இளவரசி ஷீலாவின் திருமணம் நடந்தது.

திருமணம் முடிந்தவுடன் புதுமணத தம்பதிகள் கடற்கரைக்குச சென் றார்கள்.
இரண்டு நாளில் இளவரசி ஷீலா தன் கணவனுடன் புகுந்த வீட் டுக்கு புறப்பட்டுச் சென்றாள்.
மனனர் ஜோன் கண்ணில் கண் ணீருடன் வழி அனுப்பி வைத்தாா.
மாமா! கதை முடிந்துவிட்டதா?
இல்லை ரெக்ஸ்! கதையின் முடிவு மிகவும் மகிழ்ச்சி யாக இருக்கும்!


முடிவில் என் தோழர்கள் என் காதலி நடலாவை என்னுடன் இணைத்து வைக்க முன்றார்கள்.


ஒரு நல்ல நாளில் எங்கள் திருமணம் நடந்தது.
ஜோன்! நீ வந்ததில் எனக்கு நிரம்ப மகிழ்ச்சி!
நான் வராமல் உன் திருமணம் நடை பெற்றுவிடுமா?
திருமணத்திற்கு மன்னர் ஜோனும் வந்திருந்தார்.

மாயாவி! நீ என் அரச குடும்பத்தையே காப்பாற்றியிருக்கிறாய். எனவே என் மகளுக்காக வைத்திருந்த தங்கக் கடற்கரையை என் திருமண பரிசாக உனக்கு அளிக்கிறேன்!


மறுக்காமல் பெற்றுக்கொள்! என் மகள் ஷீலாவின் ஆசையும் அதுதான்!
ஆகா! அழகான இடம்!
உன்னைவிடவா இது அழகு?
அன்றே- மாயாவி தன் மனைவியை அழைத்துக்கொண்டு தேனிலவுக்காக தங்கக் கடற்கரைக்குச் சென்றார்.



விந்தையான தாமரை!

சோவியத்நாட்டில் 'காபர் வோங்க்' என்ற இடத்தில் உள்ள குகைகளில் அதிசயமான தாமரை மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன. காற்றடிக்கும் போது இம் மலர்கள் நிறம் மாறுகின்றன. முதலில் நீலநிற மாகி, பிறகு இரத்தச் சிவப்பாக வும் வெண்மையாகவும் மாறி, மீண்டும் சிவப்பாகி விடுகின்றன. மாலையில் பெரும்பாலும் கருமையான ரோஜா நிறத்தில்தான் காட்சி அளிக்கின்றன.

–கடல். நாகராசன்.

முட்டாள் மாப்பிள்ளை!

–எ. சோதி

ஓர் ஊரில் மணி என்ற இளைஞன் ஒருவன் இருந்தான். ஆள் வளர்ந்திருந்த அளவுக்கு அவனுக்கு அறிவு வளரவில்லை. முட்டாளாகவே இருந்தான்.

ஒருநாள் அவன் தாய் அவனை அழைத்து "நல்லூரில் இருக்கும் உன் மாமன் தன் ஒரே மகளை உனக்குத் திருமணம் செய்துகொடுக்க எண்ணி இருக்கிறார் நீ அவளை மணந்து கொள்ளவேண்டும் என்பதுதான் என் ஆசையும். உன்னை அவர்கள் ஊருக்கு வருமாறு பலமுறை அழைத்திருக்கிறார்கள். அதனால் நீ அங்கு சென்று அந்த பெண்ணைப் பார்த்துவிட்டு வா. உனக்குப் பிடித்திருந்தால் உடனே திருமணத்தை வைத்துக்கொள்ளாலம்" என்றாள்.

"சரிம்மா... மாமா வீட்டிற்கு நாளையே புறப்படுகிறேன். அங்கு நான் எப்படி நடந்து கொள்ளவேண்டுமென்று சொல். அப்படியே நடந்து கொள்கிறேன்" என்றான் அவன்.

"மகனே! நீ முட்டாள் என்பது அவர்களுக்குத் தெரியாமல் நடந்துகொள். நான் சொல்கிற மூன்று அறிவுரைகளையும் கவனமாகப் பின்பற்று. உனக்கு எந்தத் தொல்லையும் நேராது" என்றாள் தாய்.

"என்னம்மா அந்த மூன்று அறிவுரைகள்?" என்று ஆர்வத்துடன் கேட்டான் மகன்.

"முதலாவதாக நீ எப்பொழுதும் நேர்வழியில்தான் போகவேண்டும். என்ன நடந்தாலும் வேறு வழியில் போகக்கூடாது. இரண்டாவதாக எப்பொழுதும் பணிவாக இருக்கவேண்டும். மூன்றாவதாக யார் உனக்கு எதைத் தந்தாலும் நீ அதை மகிழ்ச்சியுடன் தலையால் ஏற்றுக்கொள்ள வேண்டும். இதுதான் நான் உனக்குத் தரும் மூன்று அறிவுரைகள். கவனமாக நடந்துகொள்" என்றாள் அவள்.

"அம்மா! கவலைப்படாதீர்கள். நீங்கள் சொன்ன மூன்று அறிவுரைகளையும் அப்படியே பின்பற்றுவேன். மாமா வீட்டில் நல்ல பெயர் எடுத்து ஊர் திரும்புவேன்" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டான் அவன்.

சிறிது தூரம் வந்ததும் ஒரு ஆறு குறுக்கிட்டது. படகில் ஏறிச் செல்லலாம் என்ற எண்ணத்தில் கரையில் காத்திருந்தான்.

வந்த படகோ நேராக வராமல் வளைந்து வளைந்து வந்தது.

இதைப் பார்த்த அவன், 'என் தாய் என்னை எப்பொழுதும் நேர்வழியில் போகச் சொல்லி இருக்கிறாள். வளைந்து வளைந்து செல்லும் இந்தப் படகில் ஏறினால் அவர் அறிவுரைப் மீறியதாக ஆகுமே. என்ன செய்வது?' என்று சிந்தனையில் ஆழ்ந்தான்.

என்ன நடந்தாலும் தாயின் அறிவுரையை மீறக்கூடாது என்று நினைத்தான் அவன். ஆற்றில் குதித்த அவன் நேராக நீச்சல் அடித்து மறு கரையை அடைந்தான்.

அவன் நடந்து சென்ற சாலையும் வளைந்து சென்றதால் வயலில் இறங்கி நடந்தான்.

வழியில் பெரிய மரம் குறுக்கிட்டது. அந்த மரத்தைச் சுற்றிச் செல்லாமல் அதில் நேராக ஏறிக் கிளை வழியே கீழே குதித்தான்.

எப்படியோ துன்பப்பட்டு மாமா வீட்டை அடைந்தான் அவன். தன் தாயின் முதல் அறிவுரையை வெற்றிகரமாக முடித்துவிட்டோம் என்ற மகிழ்ச்சி அவனுக்கு ஏற்பட்டது.

உடலெங்கும் சேறும் சகதியுமாக வந்திருந்த மருமகனைக்

கண்டு மாமானும் மாமியும் திகைத்தனர். "இப்பொழுதாவது எங்கள் வீட்டிற்கு வழி தெரிந்து வந்து சேர்ந்தாயே" என்று அவனை மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

குளித்துவிட்டுத் திரும்பிய அவனுக்கு சாப்பாடு போட்டார்கள்.

அவனைப் பார்த்து அத்தை, "சிறுவனாக இருந்தபோது உன்னைப் பார்த்தது. இப்பொழுது எவ்வளவு வளர்ந்து விட்டாய். விரைவில் உனக்கும் என் மகளுக்கும் திருமணம் செய்து விடுவோம். முதலில் இந்த வெற்றிலை பாக்கைப் போடுங்கள்" என்று தட்டை அவனிடம் நீட்டினாள்.

இதற்கு முன் வெற்றிலையே போட்டிராத அவன் என்ன செய்வது என்று குழம்பினான். தன் தாயின் இரண்டாம் அறிவுரை அவன் நினைக்கு வந்தது.

எந்தச் சூழலிலும் பணிவாகவே நடந்து கொள்ளவேண்டும் என்ற எண்ணத்தில் தட்டில் இருந்த வெற்றிலை பாக்கைப் பணிவாக எடுத்தான். அவற்றை வாயில் போட்டு மெல்லத் தொடங்கினான் அவன்.

மென்றுகொண்டே அங்கிருந்த கண்ணாடியில் தன் முகத்தைப்

பார்த்து திடுக்கிட்டான்.

வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு இரத்தச் சிவப்பாக அவன் உதடுகளில் வழிந்தது. வெற்றிலைச்சாறு சிவப்பு நிறமாகும் என்பது அவனுக்குத் தெரியாது. இரத்தம்தான் உதடுகளில் வடிகிறது என்று நினைத்தான் அவன். இப்படியே இரத்தம் வடிந்தால் இன்னும் சிறிது நேரத்தில்தான் இறந்து விடுவது உறுதி என்று பயந்து போனான்.

“ஐயோ! நான் என்ன செய்வேன்? இங்கு வந்து நான் சாகவேண்டி உள்ளதே” என்று அழுது புலம்பத் தொடங்கினான்.

மருமகன் அழுவதைக் கண்ட அங்கிருந்த எல்லோரும் என்னவோ ஏதாவென்று பயந்தனர். அவனைக் கட்டிப்பிடித்துக் கொண்டு அவர்களும் அழத்தொடங்கினார்கள்.

அவர்கள் அழுகைச் சத்தம் கேட்டுத் தெருவில் இருந்த பலரும் அந்த வீட்டிற்குள் ஓடிவந்தனர்.

ஏன் அவர்கள் அழுகிறார்கள் என்று வந்தவர்களுக்குப் புரியவில்லை.

நிலைமையை உணர்ந்த முதியவர் ஒருவர் அவனைப் பார்த்து, “எதற்காக இப்படி அழுகிறாய்? உன்னைப் பார்த்து எல்லோரும் அழுகிறார்களே” என்று கேட்டார்.

“ஐயா! நல்ல நேரத்திற்கு வந்தீர்கள். நான் இன்னும் சிறிது நேரத்தில் இறக்கப் போகிறேன்” என்று சொல்லிவிட்டு மீண்டும் அழுதான் அவன்.

“உனக்கு என்ன உடம்பிற்கு? எதுவாக இருந்தாலும் தயங்காமல் சொல்” என்றார் பெரியவர்.

“என் உதடுகளில் இரத்தம் வடிவது உங்களுக்குத் தெரியவில்லையா?” என்று கேட்டான் அவன்.

என்ன நடந்திருக்கும் என்பதை உணர்ந்த முதியவர், “தம்பி! அது இரத்தம் அல்ல. நீ வாயில் போட்டுமென்றாயே அந்த வெற்றிலை பாக்கு சுண்ணாம்பு கலந்த நிறந்தான் அது” என்று விளக்கினார்.

அங்கிருந்த கூட்டமும் அவன் முட்டாள்தனத்தை எண்ணிச் சிரித்துக்கொண்டே கலைந்தது.

மாலை நேரம் வந்தது. மருமகன் சாப்பிட சுடச்சுட சூப்பு கொண்டு வந்தாள் அத்தை.

இதற்கு முன் அப்படிப்பட்ட ஒன்றைப் பாத்திராத அவன்

வேண்டாம் என்று மறுத்தான்.

"உனக்காக நானே என் கையால் செய்தது. வேண்டாம் என்று சொல்லாதீர்கள்" என்றாள் அவள்.

"அத்தை வருத்தப்படப் போறாங்க. வாங்கிக் கொள்ளுங்கள்" என்றார் மாமா.

'யார் என்ன தந்தாலும் தலையால் ஏற்றுக்கொள்' என்று தன் தாயார் சொன்ன மூன்றாவது அறிவுரை அவன் நினைவுக்கு வந்தது.

சூடாக இருந்த சூப்பை வாங்கிய அவன் அதை அப்படியே தன் தலையில் கவிழ்த்துக்கொண்டான். சிறிது நேரத்தில் சூடு தாங்காமல் துடித்தான் அவன்.

"என்ன மாப்பிளை இப்படிச் செய்துவிட்டீர்கள்" என்று அலறினாள் அத்தை.

"என் அம்மா சொன்ன மூன்று அறிவுரைகளையும் எவ்வளவோ துன்பப்பட்டு அப்படியே நிறைவேற்றி விட்டேன்" என்ற அவன் நடந்ததை எல்லாம் அவர்களிடம் ஒன்று விடாமல் விளக்கமாகச் சொன்னான்.

அப்பொழுதுதான் அவர்களுக்கு எப்படிப்பட்ட முட்டாளுக்குத் தங்கள் மகளைத் தர இருந்தோம் என்ற உண்மை புரிந்தது.

கண்டுபிடியுங்கள் - 53

ரூ. 500 பரிசு!

கீழே கொடுக்கப்பட்டுள்ள படங்களை உற்றுப் பாருங்கள். அவற்றின் பெயர்களில் இருந்து ஓர் எழுத்தை மட்டும் எடுத்து ஒன்று சேருங்கள். பஞ்சபாண்டவர்களில் ஒருவர் கிடைப்பார். அவர் யார்? கண்டுபிடியுங்கள் பார்ப்போம். உங்களுக்காக ரூ. 500 பரிசு காத்திருக்கிறது!

அவர் யார்? என்பதை (பெயரை மட்டும்) ஓர் அஞ்சல் அட்டையில் எழுதி அனுப்புங்கள். முகவரி எழுதவேண்டிய இடத்தில், இத்துடன் உள்ள முகவரி கூப்பனை வெட்டி ஒட்ட வேண்டும்.



சரியான விடை எழுதியவருக்கு ரூ. 500 பரிசு கொடுக்கப்படும்! பலபேர் சரியான விடை எழுதியிருந்தால், பரிசுக்கு உரியவர்கள் குலுக்கல் முறையில் தேர்ந்து எடுக்கப்படுவார்கள்.

முடிவு தேதி: 28–9–92.

அனுப்ப வேண்டிய முகவரி:–

கண்டுபிடியுங்கள்,
"ராணி காமிக்ஸ்",
சென்னை-600 007.

கண்டுபிடியுங்கள் – 51

பரிசு பெற்றவர்கள்:–

ஏப்ரல் 1-ந்தேதி வெளியான "ராணி காமிக்ஸ்" கண்டுபிடியுங்கள் போட்டியின் விடை:– இஸ்லாமாபாத்.

நூற்றுக்கணக்கானோர் சரியான விடை எழுதியிருந்ததால், பரிசுக்குரிய 25 பேரை குலுக்கல் முறையில் தேர்ந்து எடுத்தோம்.

பரிசுத்தொகை ரூ. 500, ஆளுக்கு ரூ. 20 வீதம் பிரித்துக் கொடுக்கப்பட்டது.

பரிசு பெற்றவர்கள்:–

(1) கே. பெரியசாமி, இனாம்புலியூர். (2) எஸ். அனிதா, சென்னை-90. (3) என். மணிகண்டமூர்த்தி, தளவாய்பட்டணம். (4) ஆர். லட்சுமி, போத்தனூர். (5) ஏ. வெங்கடேஷ், திருப்பூர்.

(6) அ. தமிழ்ச்செல்வி, திருச்சி-1. (7) பி. கதிரேசன், சுல்தான்பேட்டை. (8) சி. சங்கீதா, சாமியார் பாளையம். (9) டி. கார்த்திகேயன், துறையூர். (10) வகிதா பானு, சென்னை-52.

(11) ஆர். அருள்தாஸ், வேலூர். (12) எஸ்.கே. வர்தனி, மதுரை-14. (13) எஸ். ரமேஷ், ஏற்காடு. (14) எஸ். பரமேசுவரி, சிவகங்கை. (15) ஆர். கந்தன், ஆனத்தூர்.

(16) எஸ். உமா, பாட்டப்பத்து. (17) ஏ.கே. கணேசன், பி. குமாரபாளையம். (18) ஆர். திலகம், கொடராச்சேரி. (19) எஸ். குமார், மைலம்பாடி. (20) ஏ. மலர், விருத்தாசலம்.

(21) பி. பாலு, தாமரன்கோட்டை. (22) டி. தேன்மொழி, கருங்கல் பாளையம். (23) பி. ராபர்ட் கென்னடி, மதுரவாயல். (24) ஜி. வாணிஸ்ரீ, வேலூர்-9. (25) வி. கவுதமி, திருவாரூர்.

★

ராணி சிண்டிகேட் சார்பில் அச்சிட்டு, வெளியிட்டவர்: சி. கல்யாணசுந்தரம், ராணி அச்சகம், 1091, பெரியார் நெடுஞ் சாலை, சென்னை-600 007. ஆசிரியர்: அ. மா. சாமி, 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600 007.

வெள்ளை காண்டாமிருகம்!

பாரிசு மிருகக்காட்சி சாலையில் உள்ள ஒரு காண்டாமிருகத்திற்கு வெள்ளை காண்டாமிருகக் குட்டி பிறந்திருக்கிறது. காண்டா மிருகம் வெள்ளை நிறத்தில் பிறப்பது இதுவே முதல் முறை. குட்டியின் எடை 55 கிலோ இருக்கிறது.

தண்ணீரில் ஓடும் பஸ்!

பஸ் ரோட்டில் ஓடும்! தண்ணீரில் ஓடுமா? ஓடும். அதற்கு ஏற்ப ஒரு பஸ் வடிவமைக்கப்பட்டு இருக்கிறது. அது சகாரா பாலைவனத்திலும் ஓடும்! ஆற்றிலும் ஓடும். இந்த நவீன பஸ்ஸை பிரான்சு கம்பெனி தயாரித்து உள்ளது. ஆராய்ச்சி, சாகச பயணங்களுக்கு பயன்படுத்திகொள்ளும் வகையில் தயாரித்து உள்ளனர். இதன் நீளம் 8 மீட்டர். அகலம் 2.4 மீட்டர். 1500 கி.மீ. வரை நிற்காமல் செல்லலாம். 16 பேர் வசதியாக உட்கார இருக்கை உள்ளது. இதுதவிர சமையலறை, கழிவறை, ஆடியோ, வீடியோ வசதி, டெலிபோன், குளு குளு வசதி இருக்கிறது. பஸ்சின் பின்பகுதியில் 220 வோல்ட் ஜெனரேட்டர் இருப்பதால் இரவு நேரம் கூட மின்னொளியில் ஜொலிக்கும்!

பரிசு பெற்ற படங்கள்!



எம். சதீஷ்குமார்,
சென்னை-7.

வானவில் மூர்த்தி,
கடலூர்.

ஆர். பாலமுருகன்,
திருச்சி-19.



அ. முருகேசுவரி,
சென்னை-13.

Regd. No. TN/MS (N)/461
Registered as Newspaper in Sri Lanka

RANI COMICS
(TAMIL FORTNIGHTLY)

அடுத்த
காமிகஸ்



அபாயக் கோள்

விண்வெளியில் நடக்கும்
பயங்கரச் சண்டைகள்!

திடீர்த் திருப்பங்கள்
நிறைந்த படக்கதை!!

படிக்கத் தவறாதீர்கள்!!!

அக்டோபர் 1-ந்தேதி
வெளிவருகிறது!

"ராணி காமிக்ஸ்", சென்னை-600 007.